



# சக்கர வியூகம்

SAKKRA VIYUGAM

புலனாய்வு நாளிதழ்

"தேமதுரத் தமிழோசை உலகமெலாம்"






Website: www.sakkraviyugam.com | PRGI:TNTAM/25/A1018 | Email: sakkraviyugam@gmail.com

VOLUME : 01 | ISSUE: 357 | 19.06.2026 | FRIDAY | AANI : 5 | PRICE : RS.5/-

மலர் : 01 | இதழ் : 357 | 19.06.2026 | வெள்ளிக்கிழமை | ஆனி : 5 | விலை : ரூ.5/-


# தமிழக அரசு மக்கள் மாளிகை இடையே "இணக்கமான சூழல்"

## ஆளுநர் அர்லேகர் விவரிப்பு

சென்னை: ஜூன்.19-

"முதல் முறையாக சட்டப்பேரவையில் ஆளுநர் உரையின் தொடக்கத்திலும், ஆளுநர் உரையின் இறுதியிலும் தேசிய கீதம் பாடப்பட்ட சரித்திர நிகழ்வானது, மாநில அரசு மற்றும் மக்கள் மாளிகை இடையே இணக்கமான சூழல் நிலவ வேண்டும் என்ற தமிழக மக்களின் எதிர்பார்ப்பை பூர்த்தி செய்து, மக்களாட்சியின் மாண்பை நிலை நாட்டும் விதமாக அமைந்துள்ளது" என்று தமிழக ஆளுநர் ஆர்.வி.அர்லேகர் தெரிவித்துள்ளார்.



இது தொடர்பாக ஆளுநர் மாளிகை எக்ஸ் பக்கத்தில் பகிரப்பட்ட பதிவில், 'தமிழ்நாடு சட்டமன்றத்தில் புதிய உதயம் தோன்றிய நாள் இன்று என்பதை மக்களுக்கு மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். மூன்று ஆண்டுகளுக்குப் பிறகு ஆளுநரின் முழு உரையும் எவ்வித இடையூறும் இன்றி, சட்டமன்றத்தில் இன்று வாசிக்கப் பெற்றது மன நிறைவைத் தருகிறது.

மேலும், முதல் முறையாக சட்டசபையில் ஆளுநர் உரையின் தொடக்கத்திலும், ஆளுநர் உரையின் இறுதியிலும் தேசிய கீதம் பாடப்பட்ட சரித்திர நிகழ்வானது, மாநில அரசு மற்றும் மக்கள் மாளிகை இடையே இணக்கமான சூழல் நிலவ வேண்டும் என்ற தமிழக மக்களின் எதிர்பார்ப்பை பூர்த்தி செய்து, மக்களாட்சியின் மாண்பை நிலை நாட்டும் விதமாக அமைந்துள்ளது என்றால் அது மிகையல்ல.

ஜனநாயகத்தில் ஆளப்படும் ஆட்சியானது, ஒருங்கிணைந்த, இணக்கமான உறவை அனைத்து தரப்பிலும் நிலைநாட்டி, மக்களின் எதிர்பார்ப்புகளை, தேவைகளை பூர்த்தி செய்வதையே ஓர் நிலையான, முன்னுதாரணமான அரசானது தனது நோக்கமாகக் கொண்டு செயல்பட வேண்டும் என்ற இலக்கை நோக்கி நாம் அனைவரும் இணைந்து பயணிக்கத் தொடங்கியுள்ளோம் என்பது மனதுக்கு நிறைவைத் தருகிறது' எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தமிழக சட்டப்பேரவையின் ஆண்டு முதல் கூட்டம் ஆளுநர் உரையுடன் தொடங்குவது வழக்கம். அதன்படி கடந்த ஜனவரி மாதம் அப்போதைய ஆளுநர் ஆர்.என்.ரவி தலைமையில் சட்டப் பேரவைக் கூட்டம் தொடங்கியது. ஆளுநர் ரவி, வந்தே மாதரம் பாடல் இசைக்கப்படாததை சுட்டிக்காட்டி, அரசு தயாரித்து அளித்த உரையைப் பேரவையில் வாசிக்காமல் வெளியேறினார். அதன்பின், அரசு தயாரித்து அளித்த உரை மட்டுமே பேரவைக் குறிப்பில் இடம்பெற வேண்டும் என்பதற்கான தீர்மானம் நிறைவேற்றப்பட்டு அப்போதைய பேரவைத் தலைவர் மு.அப்பாவு தமிழ் உரையை வாசித்தார்.

அதற்குப் பிறகு சட்டப்பேரவைப் பொதுத்தேர்தல் நடைபெற வேண்டிய நிலையில், அப்போதைய திமுக அரசு இடைக் கால பட்ஜெட் தாக்கல் செய்தது. சட்டப்பேரவைப் பொதுத் தேர்தல் முடிந்து, தவெக 108 இடங்களில் வெற்றி பெற்றது.

இந்நிலையில், தமிழகத்தின் 17ஞ்வது சட்டப்பேரவைக் கூட்டம் ஆளுநர் ஆர்.வி.அர்லேகர் தலைமையில் இன்று காலை 10 மணிக்குத் தொடங்கியது. முதலில் தமிழ்த்தாய் வாழ்த்து பாடப்பட்டது. பின்னர் தேசிய கீதம் பாடப்பட்டது. ஆளுநர் உரை முடிந்தபின்னரும் தேசிய கீதம் மீண்டும் இசைக்கப்பட்டது.

இதைச் சுட்டிக்காட்டியே மாநில அரசுடன் இணக்கமான சூழல் உருவாகியுள்ளதாக ஆளுநர் அர்லேகர் நெகிழ்ச்சியுடன் ட்வீட் செய்துள்ளார்.

## "இரண்டு முறை தேசிய கீதம் பாடப்பட்டதில் தவறொன்றும் இல்லை" பிரேமலதா கருத்து

சென்னை: ஜூன்.19-

"சட்டப்பேரவையின் மரபு மாற்றப்பட்டு அவையில் இரு முறை தேசிய கீதம் பாடப்பட்டது. அதை நாம் வரவேற்போம்; இதில் தவறு ஒன்றும் கிடையாது." என தேதிமுக பொதுச்செயலாளர் பிரேமலதா விஜயகாந்த் கருத்து தெரிவித்துள்ளார்.



தமிழகத்தின் 17ஞ்வது சட்டப்பேரவைக் கூட்டம் ஆளுநர் ஆர்.வி.அர்லேகர் தலைமையில் இன்று காலை 10 மணிக்குத் தொடங்கியது. இந்த கூட்டத்தொடர் தமிழ்த் தாய் வாழ்த்துடன் தொடங்கியது, இரண்டாவதாக தேசிய கீதம் பாடப்பட்டது. அதனைத் தொடர்ந்து ஆளுநர் அர்லேகர் உரையை வாசித்தார்.

சட்டப்பேரவையின் மரபு மாற்றப்பட்டு அவையில் இரு முறை தேசிய கீதம் பாடப்பட்டது. அவையின் தொடக்கத்தில் தமிழ்த் தாய் வாழ்த்து, முடிவில் தேசிய கீதம் பாடுவதே மரபு. இதை மாற்றி, இன்று தொடக்கத்தில் தமிழ்த் தாய் வாழ்த்துடன் தேசிய கீதமும் பாடப்பட்டது. பின்னர், ஆளுநர் உரைக்கு பின்னரும் 2வது முறையாக தேசிய கீதம் பாடப்பட்டது குறிப்பிடத்தக்கது.

இது குறித்து பிரேமலதா விஜயகாந்த் செய்தியாளர்களிடம் பேசும்போது, "தேசிய கீதம் இரண்டு முறை பாடப்பட்டுள்ளது. அதை நாம் வரவேற்போம்; இதில் தவறு ஒன்றும் கிடையாது. அதற்கு முன்னர் தமிழ்த் தாய் வாழ்த்து பாடியிருக்கிறார்கள்; அதையும் நாம் வரவேற்போம். ஆளுநர் உரை ஆளும் கட்சி தரப்புக்கு ஆதரவான உரையாக இருந்தது" என்று அவர் தெரிவித்தார்.

## "சட்டப்பேரவை நிகழ்வுகள் நேரலை இனி தொடரும்" : அமைச்சர் ராஜ்மோகன்

சென்னை: ஜூன்.19-

"இரண்டு, மூன்று ஆண்டுகளாக இருட்டடிப்பு செய்யப்பட்ட சட்டப்பேரவை நேரலை, மீண்டும் தொடங்கியிருக்கிறது. இனி சட்டப்பேரவை நேரலை தொடரும்" என அமைச்சர் ராஜ்மோகன் தெரிவித்தார்.



ஆளுநர் உரைக்கு பின்னர் சட்டப்பேரவை வளாகத்தில் செய்தியாளர்களிடம் பேசிய அமைச்சர் ராஜ்மோகன், "தமிழ் எங்கள் மூச்சு, தமிழ் எங்கள் பேச்சு, இந்த வாழ்வு தமிழ் தந்தது. எனவே எப்போதும் தமிழுக்கே முதலிடம். ஒன்றிய அரசின் சுற்றறிக்கையின் படி வந்தே மாதரம் முதலில் பாடவேண்டும் என சொல்லப்பட்டுள்ளது. ஆனால் அதனை கடைப்பிடிக்காமல், தமிழக அரசின் நிலைப்பாட்டின்படி தமிழ்த்தாய் வாழ்த்து இன்று முதலில் பாடப்பட்டது.

தமிழக சட்டப்பேரவைக்கு ஒரு கண்ணியமும், மாண்பும் இருக்கிறது. ஜனநாயகப்பூர்வமாக எதிர்க்கட்சிகள் அவர்களின் எதிர்வினையை ஆற்றலாம். இன்றைய தினத்தில் கூட திமுக உறுப்பினர்கள் கருப்பு பேட்ஜ் அணிந்து வந்தனர். எதிர்க்கட்சிகள் அவர்களின் எதிர்ப்பை காட்டலாம். ஆனால், அவர்கள் சென்ற ஆட்சியில் அப்படி வந்திருக்க வேண்டும். கொஞ்சம் கால தாமதமாக வந்துள்ளனர்.

பொது அமைதியையும், சட்டம் ஒழுங்கையும், நீதியையும் நிலைநாட்டுவதற்காக சிங்கப்பெண் சிறப்புப் படை உட்பட பல்வேறு நடவடிக்கைகளை இந்த அரசு மேற்கொள்கிறது. எனவே இந்த பேட்ஜ்களை அவர்கள் கடந்த ஆட்சியில் அணிந்து வந்திருக்க வேண்டும்.

இன்றைய ஆளுநர் உரை நல்ல முறையில் தொடங்கியுள்ளது. தொடக்கம் நல்ல முழக்கமாக இருக்கிறது. இன்று அலுவல் ஆய்வுக் கூட்டம் நடக்கிறது. அடுத்தடுத்த அறிவிப்புகள் விரைவில் வெளிவரும். 2024ல் சராசரியாக ஒரு நாளைக்கு 30 வழக்குகள் பதியப்பட்டதாக சொல்கிறார்கள். இப்போது அதைவிட குற்றங்கள் குறைந்துள்ளன. காவல் நிலையங்கள் மீதான பாதுகாப்பு உணர்வு அதிகரித்துள்ளதால், பாதிக்கப்பட்டவர்கள் அதிகளவில் வெளியில் வருகின்றனர்.

இப்போதைய ஆட்சியில் எந்த பாரபட்சமும் இல்லாமல் துரித நடவடிக்கை எடுக்கப்பட்டு, அதிகபட்சமான தண்டனை பெற்றுத்தர வேலைகள் நடந்துகொண்டிருக்கிறது. சாதிவாரி கணக்கெடுப்பு, சமூக நீதி கணக்காய்வு நடத்தப்பட வேண்டும் என நாங்கள் தொடர்ந்து வலியுறுத்தி வருகிறோம். சாதிவாரி கணக்கெடுப்பை மத்திய அரசு நடத்தும், சமூக நீதி கணக்காய்வை மாநில அரசு நடத்தும்.

கொடுத்த வாக்கை காப்பாற்றியுள்ளார் முதல்வர் விஜய். இரண்டு, மூன்று ஆண்டுகளாக இருட்டடிப்பு செய்யப்பட்ட சட்டப்பேரவை நேரலை, மீண்டும் தொடங்கியிருக்கிறது. இனி சட்டப்பேரவை நேரலை தொடரும். இது ஜனநாயகத்துக்கு மிகப்பெரிய எடுத்துக்காட்டு. வெளிப்படைத் தன்மை மற்றும் நேர்மையான நிர்வாகத்துக்கு இன்றைய நிகழ்வு மிகப்பெரிய எடுத்துக்காட்டு" எனத் தெரிவித்தார்.

## ஆளுநர், பாஜக, திமுக ஒன்றாக இருப்பதாக அமைச்சர் நிர்மல் குமார் குற்றச்சாட்டு

சென்னை: ஜூன்.19-

"பாஜகவுக்கும், திமுகவுக்கும் தான் மிக நெருக்கமான உறவு உள்ளது. அமலாக்கத் துறை சார்பில் செந்தில் பாலாஜி உள்ளிட்ட சிலர் மீது நடவடிக்கை எடுக்க கேட்டிருந்தார்கள், அந்த கோப்புகள் கடந்த வாரம் கையெழுத்தானது. ஆனால், ஆளுநர் அதற்கு இதுவரை ஒப்புதல் அளிக்கவில்லை. அப்படியானால் யார் யாருடன் இணக்கமாக இருக்கிறார்கள்? ஆளுநரும், பாஜகவும், திமுகவும் ஒன்றாக இருக்கிறார்கள்" என அமைச்சர் நிர்மல் குமார் கேள்வி எழுப்பியுள்ளார்.



ஆளுநர் உரைக்கு பின்னர் சட்டப்பேரவை வளாகத்தில் செய்தியாளர்களிடம் பேசிய அமைச்சர் நிர்மல் குமார், "பாஜகவுக்கும், திமுகவுக்கும் தான் மிக நெருக்கமான உறவு உள்ளது. அமலாக்கத் துறை சார்பில் செந்தில் பாலாஜி உள்ளிட்ட சிலர் மீது நடவடிக்கை எடுக்கக் கேட்டிருந்தார்கள், அந்த கோப்புகள் கடந்த வாரம் கையெழுத்தானது. ஆனால், ஆளுநர் அதற்கு இதுவரை ஒப்புதல் அளிக்கவில்லை. அப்படியானால் யார் யாருக்கு இணக்கமாக இருக்கிறார்கள். ஆளுநரும், பாஜகவும், திமுகவும் ஒன்றாக இருக்கிறார்கள்.

பாஜகவின் மறைமுக முகமாக திமுக இருக்கிறது. திமுகவை பின்னாலிருந்து இயக்குவதே பாஜகதான். செந்தில் பாலாஜி உள்ளிட்டோர் மீதான கோப்புகள் மீது ஆளுநர் கையெழுத்து போடாதது ஏன்?. இதற்கு பாஜகவும், திமுகவும் பதில் சொல்ல வேண்டும்.

சட்டப்பேரவையில் முதல்வர் பேச வேண்டும் என திமுக உறுப்பினர்கள் பேட்ஜ் அணிந்து வந்துள்ளனர். துணை முதல்வராக இருந்த உதயநிதிக்கு சட்டப்பேரவை நடைமுறைகள் குறித்து கூட தெரியவில்லை. இன்று ஆளுநர் உரை, எனவே ஆளுநர் மட்டும் தான் பேசுவார். பதிலுரையின் போதுதான் முதல்வர் பேசுவார்.

தமிழகத்தில் ஏற்படும் மின் வெட்டுகள் உடனடியாக சரிசெய்யப்பட்டுள்ளது. எந்தெந்த இடங்களில் மின்வெட்டு இருந்தது, அதனை எவ்வளவு நேரத்தில் சரிசெய்தோம் என்ற விவரங்களை அடுத்தநாள் தினமும் வெளியிடுகிறோம்.

கடந்த 5 ஆண்டுகளில் குற்றச் சம்பவங்கள் நடக்கும்போது, அனைத்தும் மறைக்கப்பட்டதையே பார்த்தோம். அண்ணா பல்கலைக்கழக மாணவி பாலியல் வன்கொடுமை சம்பவத்தில், ஒரு வாரம் கடுமையான போராட்டத்துக்குப் பின்னர் நடவடிக்கை எடுக்கப்பட்டது. முகப்பேர் சிறுமி விவகாரத்தில் உயர் நீதிமன்றம் தலையிட்டு சிபிஐ விசாரணைக்கு உத்தரவிட்டது.

கடந்த ஆட்சியில் குற்றச் சம்பவங்களை மறைக்கும் வேலையை செய்தார்கள். எங்கும் ஒழுங்காக வழக்குப் பதிவு செய்யப்படவில்லை. இப்போது யார் குற்றம் செய்தாலும் கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டும் என முதல்வர் கண்டிப்பாக சொல்லியுள்ளார். தவறுகள் நடந்த எல்லா இடங்களிலும் உடனடியாக நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. குற்றச்சம்பவங்களை தடுக்க அதிகாரிகளை மாற்றும் பணிகள் நடைபெற்று வருகிறது. கடந்த அரசைப் போல இந்த அரசு எதையும் மூடி மறைக்கவில்லை.

பெண்கள் பாதுகாப்புக்காக கொண்டுவரப்பட்ட சிங்கப்பெண் திட்டத்தை விரிவாக்குவதே முதல்வரின் நோக்கம். சமூக ரீதியாக நடக்கும் குற்றங்களை தடுக்கவும், குறைக்கவும் அரசு முழுவீச்சில் நடவடிக்கை எடுக்கும். தனிப்பட்ட முறையில் நடக்கும் குற்றங்கள் மீது பாரபட்சம் இல்லாமல் நடவடிக்கை எடுக்கப்படும். சிங்கப்பெண் படைக்கு தேவையான அதிகாரங்கள் வழங்கப்பட்டுள்ளது, கூடுதல் அதிகாரமும் வழங்கப்படும்.

தமிழக அரசின் நிதி நிலை எப்படி உள்ளது என்பதை அறிந்துகொள்ளவே வெள்ளை அறிக்கை வெளியிடப்பட்டது. மின் துறை, போக்குவரத்துத் துறை உள்ளிட்டவை எவ்வளவு கடனில் உள்ளது என பார்த்தோம். இதனை மீட்டெடுக்கும் வேலையை செய்ய வேண்டும். 20 ஆண்டுகளுக்கு முன்பு லாபத்தில் இயங்கிய மின் துறை, போக்குவரத்துத் துறை இப்போது நலிவடைந்துள்ளது. ஆனால் கூடுதல் வருவாயை பெருக்க கடந்த அரசு எதையும் செய்யவில்லை. ரூ.30 ஆயிரம் கோடியை ஒரு குடும்பம் மட்டுமே திருடிவிட்டது என முன்னாள் நிதியமைச்சர் ஒருவரின் ஆடியோ வெளியானது.

லஞ்ச, லாவண்யத்தை குறைத்தாலே நம்மால் போதுமான அளவு நிதியை சேமிக்க முடியும். நிதி ஆதாரத்தை பெருக்க முதல்வர் பாடுபட்டு வருகிறார். இப்போது இருக்கும் பிரச்சினை என்னவென்று மக்களுக்கு சொல்லிவிட்டோம். மின்சாரத் துறை சார்பாக அடுத்த வாரத்தில் முழுமையாக ஆய்வு செய்து வெள்ளை அறிக்கை வெளியிடுவோம்.

கூடுதல் வருவாயை பெருக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். தமிழகத்தில் உள்ள ஒரு அரசு பல்கலைக்கழகமாவது லாபத்தில் இயங்குகிறதா?. திமுக முன்னாள் அமைச்சர்கள் பல்கலைக்கழகங்கள் வைத்துள்ளனர். அவை அனைத்தும் 5 நட்சத்திர ஹோட்டல் அளவு வளர்ந்துள்ளன. ஆனால், அரசின் பல்கலைக்கழகங்கள் என்ன நிலையில் உள்ளது?. இதுதான் அவர்களின் சாதனை.

அரசுத்துறை நிறுவனங்கள் வளரவேண்டும். வருவாயைப் பெருக்க புதிய நிறுவனங்கள் தொடங்க வேண்டும். ஒவ்வொரு துறையும் எப்படி செயல்பட வேண்டும் என முதல்வர் உத்தரவிட்டுள்ளார். பரந்தூர் விமான நிலைய விவகாரம் குறித்து ஆய்வு செய்து முதல்வர் முடிவை அறிவிப்பார்.

கடந்த ஆட்சியில் நடந்த மிகப்பெரிய தவறு எஃப்எல்2 பார் எனப்படும் மனமகிழ் மன்றங்கள். டாஸ்மாக் எண்ணிக்கையில் 20 முதல் 30 சதவீதம் வரை எஃப்எல்2 பார்களை திறந்தார்கள். விதிமுறைகளுக்கு மாறாக கடந்த ஐந்து ஆண்டுகளில் 3 முதல் 4 மடங்கு எஃப்எல்2 பார்கள் திறக்கப்பட்டன. இதில் விதிமீறல்கள் நடந்ததா என்பது குறித்து ஆய்வு நடத்தப்படுகிறது" என்று தெரிவித்தார்.


விளம்பரம் மற்றும் செய்திகள்
தொடர்புக்கு : 88705 00000



■ தென்காசி மாவட்டம் புளியங்குடி 2வது வார்டு பகுதியில் உள்ள அங்கன்வாடி மையத்தில் பயின்று வரும் குழந்தைகளுக்கு புளியங்குடி நகரதிமுக இலக்கிய அணி சார்பில் அங்கன்வாடியில் பயின்று வரும் குழந்தைகளுக்கு வாட்டர் கேன், டிப்பன்பாக்ஸ் மற்றும் இனிப்புகள் வழங்கும் நிகழ்ச்சியானது நகர கழக செயலாளரும் நகர் மன்ற தலைவருமான அந்தோணிச்சாமி தலைமையில் நடைபெற்றது. இந்த நிகழ்ச்சியில் 2வதுவார்டு கவுன்சிலர் செலின் மாவட்ட பிரதிநிதி சுரேஷ் அன்புராஜன் மாரிக்கனி, பாலமுருகன், மாரிக்கனி, வழக்கறிஞர் அய்யனார், ஆகியோர் கலந்து கலந்து கொண்ட நிலையில் நிகழ்ச்சி ஏற்பட்டினை நகர இலக்கிய அணி ஜெகநாத பெருமாள், ஏற்பாடு செய்திருந்தனர். தொடர்ந்து அங்கன் அங்கன்வாடி மையத்தில் பயின்று வரும் குழந்தைகளுக்கு பரிசுகளை வழங்கினர்.

# "அரசு மருத்துவமனைகளின் அலட்சியத்தால் அப்பாவி மக்கள் உயிரிழக்கும் கொடுமைகளை தடுப்பீர்" சீமான்

சென்னை, ஜூன்.19-
'ராமநாதபுரம் அரசு மருத்துவமனையின் தவறான மருத்துவ சிகிச்சை காரணமாக உயிரிழந்த தமிழ்ச்செல்வி மரணத்துக்கு காரண மானவர்கள் மீது உரிய சட்ட நடவடிக்கை எடுக்க வேண்டும்' என நாம் தமிழர் கட்சியின் தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான் வலியுறுத்தியுள்ளார்.

இது குறித்து அவர் வெளியிட்ட அறிக்கையில், 'ராமநாதபுரம் மாவட்டம், பால்கரை கிராமத்தைச் சேர்ந்த சகோதரி தமிழ்ச்செல்வி, மூக்கு தண்டுவட அறுவை சிகிச்சைக்காக



ராமநாதபுரம் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட நிலையில் தவறான மருத்துவ சிகிச்சை காரணமாக உயிரிழந்த துயர நிகழ்வு பெரும் அதிர்ச்சி அளிக்கிறது. அப்பாவி பெண் உயிரிழக்க காரணமாகியுள்ள அரசு மருத்துவர்களின் அலட்சிய செயல்பாடு வன்மையாக கண்டிக்கத்தக்கது.உயிர் காக்கும் மருத்துவம் என்பது தனியார் முதலாளிகள் லாபமீட்டும் பெரும் விற்பனை சந்தையாகிவிட்ட தற்காலச் சூழலில், ஏழை மற்றும் நடுத்தர மக்கள் அரசு மருத்துவமனைகளையே முற்று முழுதாக நம்பி மருத்துவம் மேற்கொள்ள வேண்டிய நிலையுள்ளது. கோடிக்கணக்கான ஏழை மக்களின் உயிர் காக்கும் பெரும் பொறுப்பைச் சுமந்து நிற்கும் அரசு மருத்துவமனைகள் பெரும் தொண்டுள்ளத்தோடும், கவனத்தோடும் மருத்துவச்சேவை புரிய வேண்டியது இன்றியமையாததாகும். ஆனால், நடைமுறையில் அவ்வாறு செயல்படுவதில்லை என்பது மிகுந்த வேதனைக்குரியது. அரசு மருத்துவமனைகளுக்கு வரும் நோயாளிகளை அவமானப்படுத்துவதும், படிக்காத பாமர மக்கள்தானே என்ற அலட்சியத்தோடு மருத்துவம் அளிப்பதுமே தொடர் உயிரிழப்புகளுக்கு அடிப்படை காரணமாகும். ஆகவே, அரசு மருத்துவமனைகளின் அலட்சியத்தால் அப்பாவி மக்கள் உயிரிழக்கும் இதுபோன்ற கொடுமைகள் இனி வருங்காலங்களிலாவது நடைபெறாமல் தடுக்க, தமிழ்நாடு அரசு ஆக்கப்பூர்வமான நடவடிக்கைகள் எடுக்க வேண்டுமென வலியுறுத்துகிறேன். சகோதரி தமிழ்ச்செல்வி, உயிரிழக்க காரண மானவர்கள் மீது உரிய சட்ட நடவடிக்கை எடுக்க வேண்டுமெனவும், அவருடைய குடும்பத்திற்கு உரிய துயர்துடைப்பு நிதி வழங்க வேண்டுமெனவும் கேட்டுக்கொள்கிறேன்' எனத் தெரிவித்துள்ளார்.



# அரியூர் கிராம ஸ்ரீ அய்யனார்சுவாமி கிடமாட்டுத் தொழுவகம் கோவில் வருடாபிஷேக விழா

அலங்காநல்லூர், ஜூன்.19-
மதுரை மாவட்டம் அலங்காநல்லூர் அருகே உள்ள அரியூர் கிராமத்தில் அமைந்துள்ள ஸ்ரீஅய்யனார்சுவாமி, கிடமாட்டுத் தொழுவகம் திருக்கோவில்வருடாபிஷேக விழா நடந்தது.இரண்டு நாட்கள் நடந்த இந்த யாகசாலை பூஜையில் மங்கல இசை முழங்க மகா கணபதி ஹோமம்,லட்சுமி ஹோமம், தன்வந்திரி யாகம்,நவகிரக ஹோமம் நடைபெற்றது. தொடர்ந்து பல்வேறு புனித ஸ்தலங்களில் இருந்து கொண்டு வரப்பட்ட புனிதநீர் வேத மந்திரங்கள் முழங்க வானத்தில் கருடன் வட்டமிட கோவில் பீடத்தில் புனித நீர் ஊற்றப்பட்டு வருடாபிஷேகம் நடைபெற்றது. பின்னர் தீபாராதனைகள், சிறப்பு அபிஷேகங்கள்,அலங்காரங்கள் நடைபெற்றது. இதில் தமிழக வெற்றிக் கழக நிர்வாகி அரியூர் ராதாகிருஷ்ணன், மற்றும் சுற்று வட்டாரங்களைச் சேர்ந்த ஏராளமான பக்தர்கள் கலந்து கொண்டனர். கோவிலுக்கு வருகை தந்த பக்தர்களுக்கு பூஜை மலர்களு ம், பிரசாதமும், அன்னதானமும் வழங்கப்பட்டது. விழா ஏற்பாடுகளை விழா கமிட்டியின் செய்திருந்தனர்.

# தலைமை செயலகத்திற்கு மனு கொடுக்க வந்த திருநங்கைகள் தடுத்து நிறுத்தம்: இது சமூக நீதி அரசாக எங்களுக்கு தெரியவில்லை என ஆதங்கம்

சென்னை, ஜூன்.19-
தலைமை செயலகத்திற்கு மனு கொடுக்க வந்த திருநங்கைகள் தடுத்து நிறுத்தியதால் அவர்கள் போர் நினைவுச் சின்னம் அருகே போராட்டத்தில் ஈடுபட்டனர். திருநங்கைகள் தங்களது அடிப்படை வசதிகள் குறித்து தலைமை செயலகத்திற்கு மனு கொடுக்க வந்த சுமார் 50க்கும் மேற்பட்ட திருநங்கைகள் போலீஸ் அனுமதிக்காமல் போர் நினைவுச் சின்னம் அருகே தடுத்து நிறுத்தியதால் அவர்கள் அங்கு போராட்டத்தில் ஈடுபட்டனர். கைது செய்ய முடியாமல் திணறிய போலீசார், பேச்சு வார்த்தை நடத்தி அவர்களை போர் நினைவுச் சின்னம் அருகே சுற்றுலாத்துறை மைதானத்தில் உள்ளே காத்திருக்க வேண்டுகோள் விடுத்தனர். மேலும் 4 பேர் முதல்வரைச் சந்திக்க ஏற்பாடு செய்வதாக காவல்துறையினர் சமாதானம்



செய்தனர். இதற்கிடையில் நிருபர்களிடம் பேசிய திருநங்கைகள்: முதல்வரை அல்லது அதிகாரிகளை சந்தித்து மனு அளிக்க தலைமை செயலகத்திற்கு வந்தோம், ஆனால் போலீசார் எந்த காரணமும் சொல்லாமல் எங்களை தடுத்து நிறுத்தினர். இந்த மனுவில் திருநங்கைகள் உடைய அனைத்து கோரிக்கைகளும் உள்ளன. தற்போதைய சமூகத்தில் திருநங்கைகள் முன்னேற்றத்திற்காக அத்தியாவசிய அனைத்து கோரிக்கைகளும் உள்ளன. மனு கொடுக்க வந்த எங்களை தடுப்பது சமூக நீதி இல்லை, இது அநீதி. சமூக நீதி அரசாக எங்களுக்கு இது தெரியவில்லை. எல்லாருக்குமான அரசு என்று சொல்லிவிட்டு எங்களை வஞ்சிக்கிறது, சித்திரவதை செய்வது நியாயமா? மேலும் ஒரு திருநங்கை மொத்த திருநங்கை சமூகத்தை இழிவு செய்து வருகிறார். அவர் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் கோரிக்கை மனுவில் உள்ளது.இவ்வாறு அவர்கள் கூறினார்கள்





# கம்யூனிஸ்ட் மூத்த தலைவர் சி.மகேந்திரன் தவெகவில் ஐக்கியம்

சென்னை, ஜூன்.19-
இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மூத்த தலைவர் சி.மகேந்திரன் இன்று தவெகவில் இணைந்தார். மேலும், "எனது அரசியலில் நான் வியந்து பார்த்த விஷயம், இந்த தேர்தல் சாதியை ஒழித்து இருக்கிறது" என அவர் தெரிவித்துள்ளார்.

சென்னை பனையூரில் உள்ள தவெக அலுவலகத்தில் அக்கட்சியின் பொதுச் செயலாளர் என்.ஆனந்த் முன்னிலையில் கம்யூனிஸ்ட் கட்சியின் மூத்த தலைவர் சி.மகேந்திரன் தவெகவில் ஐக்கியமாகியுள்ளார்.

பின்னர் தவெகவில் இணைந்தது குறித்து விளக்கம் அளித்த அவர், "நான் அரசியலில் மிகவும் வித்தியாசமானவன். தமிழகத்தில் பல போராட்டங்களில் பங்கேற்று சிறையில் இருந்தவன். 18 வயதில் எனது பணியை தொடங்கி, இன்று வரை கம்யூனிஸ்ட் இயக்கத்துக்காக போராடிக் கொண்டிருக்கிறவன்.

நான் ஏன் இப்போது தவெகவுக்கு வந்தேன் என்பது மிகவும் முக்கியமான கேள்வி. சிவப்புத் துண்டுடன் தவெகவில் பயணிக்க விரும்புகிறேன். இதற்கு காரணம், என் வாழ்நாள் முழுவதும் சிந்தித்து நிறைவேற்ற முடியாத பிரச்சினை ஊழல் ஒழிப்புதான். இதை ஒழிக்க முடியும் என்ற நம்பிக்கையை முதல்வர் விஜய் கொடுத்துள்ளார். அதனால்தான் இங்கு இணைந்தேன்.

எனது அரசியலில் நான் வியந்து பார்த்த ஒரு விஷயம், இந்த தேர்தல் சாதியை ஒழித்திருக்கிறது. சாதியை ஒழிக்க வேண்டும், ஒழிக்க வேண்டும் என கூறினார்கள்; ஆனால் ஒழிக்க முடியவில்லை. இந்தத் தேர்தல் சாதி, மதம், ஏழை பணக்காரன் என்ற வேறுபாட்டை போக்கி, இந்திய ஜனநாயகத்தில் ஒரு சராசரி குடிமகனும் தேர்தலில் நின்று வெற்றி பெற்று வர முடியும் என்பதை முதல்வர் விஜய் உருவாக்கி இருக்கிறார்.

இந்த தேர்தலில் காசு, பணம் இல்லாதவன் வெற்றி பெற முடியும் என்பது நிரூபித்து காட்டப்பட்டிருக்கிறது. இதை ஜனநாயகத்தின் ஒரு புரட்சியாக நான் கருதுகிறேன். இது கட்சிகளை கடந்து, நமது வேறுபாடுகளை கடந்து எளிய மக்களுக்கான, அதாவது பெரியார், மகாத்மா, அம்பேத்கர் ஆகியோர் எடுத்த இயக்கமாக இது வளர வேண்டும். அதற்கான விதை தற்போது போடப்பட்டிருக்கிறது.

அனைவரும் ஒருங்கிணைந்து இதை செய்ய வேண்டும் என இங்கு இணைந்துள்ளேன். பொதுவுடமையின் இந்த வேர்கள் மேலும் பலப்படக் கூடிய விதத்தில் நானும் தமிழக வெற்றிக் கழகத்தில் இணைந்துள்ளேன்" என்று அவர் தெரிவித்துள்ளார்



# வாடிப்பட்டி தாலுகா அலுவலகத்தில்நடைபெறும் சமபந்தியில் ஆதிதிராவிடர் பொதுமக்கள் இலவச வீட்டு மனை பட்டா கேட்டு மனு

வாடிப்பட்டி, ஜூன்.19-
மதுரை மாவட்டம் வாடிப்பட்டி தாலுகா அலுவலகத்தில் சமபந்தி நடைபெற்று வருகிறது இதில் அலங்காநல்லூர் அருகே உள்ள குட்டிமேய்க்கிபட்டிகிராமத்தைச் சார்ந்த 30க்கும் மேற்பட்ட ஆதிதிராவிடர்மக்கள் அரசு வழங்கும்இலவச வீட்டு மனை பட்டா கேட்டு விடுதலை சிறுத்தைகள் கட்சியின் பஞ்சமி நில உரிமை மீட்பு மாவட்ட அமைப்பாளர்அருள்மொழியான்,தலைமையில்சமபந்தி அலுவலரிடம் மனு கொடுத்தனர்.மனுவை பெற்றுக் கொண்ட அதிகாரிகள் பரிசீலனை பண்ணிஅனைவருக்கும் அரசு வழங்கும் இலவச வீட்டு மனை பட்டா கிடைக்க வழிவகை செய்யப்படும் என தெரிவித்தனர்.

# "ஆய்வு செய்ய வந்துள்ளோம்" என்று இருக்கன்குடி மாரியம்மன் கோயிலில் தவெக நிர்வாகிகள் கடும் அத்துமீறல்

சாத்தூர், ஜூன்.19-
இருக்கன்குடி மாரியம்மன் கோயிலில் தவெக நிர்வாகிகள் ஆய்வு என்ற பெயரில் அட்ராசிட்டி செய்தது மக்களிடையே வெறுப்பை ஏற்படுத்தியுள்ளது. விருதுநகர் மாவட்டம், சாத்தூர் அருகே உள்ள இருக்கன்குடி மாரியம்மன் கோயிலில் தரிசனம் செய்வதற்காக பல்வேறு பகுதிகளில் இருந்து ஆயிரக்கணக்கான பக்தர்கள் வருகின்றனர். கோயில் நிர்வாகத்தின் சார்பில் தினசரி பக்தர்களுக்கு அன்னதானம் வழங்கப்பட்டு வருகிறது. இந்தநிலையில் சாத்தூர் தமிழக வெற்றிக்கழக கிழக்கு ஒன்றிய செயலாளர் இளையராஜா மற்றும் நிர்வாகிகள் நேற்று மதியம் கோயிலில் அன்னதானம் வழங்கும் பகுதிக்கு வந்துள்ளனர்.


பின்னர்அன்னதானம் நடைபெறும் கூடத்தை ஆய்வு செய்த அவர்கள், சாப்பிடுவதற்காக வரிசையில் நின்றிருந்த பக்தர்களிடமும் கோயில் ஊழியர்களிடமும் சரமாரி தேவையில்லாத கேள்விகளை கேட்டுள்ளனர். இது பொதுமக்கள் மற்றும் அரசு அதிகாரிகளிடையே கடும் அதிருப்தியை ஏற்படுத்தியுள்ளது. இதனிடையே, இருக்கன்குடி மாரியம்மன் கோயிலில் ஆய்வு என்ற பெயரில் அன்னதானம் சாப்பிட வந்தவர்களிடம் கேள்விகளை கேட்டு தொல்லை கொடுத்தது பக்தர்களிடையே எரிச்சலையும் வெறுப்பையும் ஏற்படுத்தியது

# பாலியல் வன்கொடுமைகளை கண்டித்து சென்னையில் பாஜக ஆர்ப்பாட்டம்: தவெக அரசுக்கு எதிராக கண்டன முழக்கங்கள் எழுப்பப்பட்டது

சென்னை, ஜூன்.19-
பாலியல் வன்கொடுமைகளை கண்டித்து சென்னையில் பாஜக சார்பில் இன்று ஆர்ப்பாட்டம் நடந்தது. ஆர்ப்பாட்டத்தின் போது தவெக அரசுக்கு எதிராக கண்டன முழக்கங்கள் எழுப்பப்பட்டது. தமிழகத்தில் அடுத்தடுத்து நிகழும் பாலியல் வன்கொடுமை சம்பவங்களை தடுக்க தவறிய தவெக அரசை கண்டித்து பாஜக சார்பில் சென்னை எழும்பூர் ராஜரத்தினம் ஸ்டேடியம் அருகில் இன்று காலை ஆர்ப்பாட்டம் நடந்தது. ஆர்ப்பாட்டத்திற்கு பாஜக தலைவர் நயினார் நாகேந்திரன் தலைமை தாங்கினார். ஆர்ப்பாட்டத்தில் மேலிட பொறுப்பாளர் அரவிந்த் மேனன், முன்னாள் தலைவர் தமிழிசை சவுந்தரராஜன், துணை தலைவர்கள் சக்கரவர்த்தி, வி.பி.துரைசாமி, மாநில செயலாளர் வினோஜ் பி.செல்வம்,கராத்தே தியாகராஜன், டால்பின் [illegible]தர், சதீஷ்குமார், பால்கனகராஜ் உள்பட ஏராளமானோர் கலந்து கொண்டனர். ஆர்ப்பாட்டத்தில் பங்கேற்றவர்கள், பிஞ்சுகளின் அலறல் சத்தம் உங்கள் காதுகளுக்கு கேட்கவில்லையா?. இன்னும் எத்தனை நாள்... இந்த மவுனம் முதல்வரே?. இன்ஸ்ட்டா முதல்வரே ரியல் உலகை பாருங்கள். அறுந்து போய்ச்சு. அறுந்து போய்ச்சு. இன்ஸ்ட்டா ரீல் அருந்து போய்ச்சு. மக்கள் மனம் நொந்து போய்ச்சு என்று கண்டன முழக்கங்களை எழுப்பினர். ஆர்ப்பாட்டத்தில் நயினார் நாகேந்திரன் பேசுகையில், "அரசியல் காரணங்களுக்கான இந்த ஆர்ப்பாட்டம் நடக்கவில்லை. பெண்களின் வாழ்க்கையை உறுதி செய்ய வேண்டும் என்பதற்காகவே இந்த ஆர்ப்பாட்டத்தை மேற்கொண்டு இருக்கிறோம்" என்றார்

# தமிழ்த் தாய் வாழ்த்து ஒலிக்க தொடங்கியது தமிழக சட்டப்பேரவை கூட்டத்தொடர்

சென்னை, ஜூன்.19-
தமிழக சட்டப்பேரவை காலை சரியாக 10 மணிக்குக் கூடியது. ஆளுநர் ஆர்.வி.அர்லேகர் முதல் முறையாக உரையாற்றி வரும் கூட்டத்தொடர் தமிழ்த் தாய் வாழ்த்து இசைக்கப்பட தொடங்கியது. தொடர்ந்து தேசிய கீதமும் இசைக்கப்பட்டது. இதில் ஏதும் சர்ச்சை உருவாகுமோ என்று சந்தேகிக்கப்பட்ட நிலையில், கூட்டத்தொடர் சலசலப்புகள் இன்றி சுமுகமாகத் தொடங்கியது. முன்னதாக தமிழக சட்டப்பேரவைக்கு வருகை தந்த ஆளுநரை தமிழக சட்டப்பேரவை சபாநாயகர், சட்டப்பேரவைச் செயலர் ஆகியோர் பூங்கொத்து கொடுத்து வரவேற்றனர். தமிழக சட்டப்பேரவைத் தேர்தல் முடிந்து, தவெக 108 இடங்களில் வெற்றி பெற்றது. இதையடுத்து, திமுக கூட்டணியில் இருந்த காங்கிரஸ், விசிக, இந்திய



கம்யூனிஸ்ட், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட், ஐயூஎம்எல் கட்சிகளின் ஆதரவுடன், முதல்வராக தவெக தலைவர் விஜய் கடந்த மே 10ம் தேதி பொறுப்பேற்றார். இதையடுத்து, 17வது சட்டப்பேரவை அமைக்கப்பட்டது. தற்காலிகப் பேரவைத் தலைவர் கருப்பையா முன்னிலையில் சட்டப்பேரவை உறுப்பினர்கள் உறுதிமொழி ஏற்றனர். அதன்பின், பேரவைத் தலைவராக ஜே.சி.டி.பிரபாகர் மற்றும் துணைத் தலைவராக ரவிசங்கர் ஆகியோர் தேர்வு செய்யப்பட்டனர்.மே.13ம் தேதி சட்டப்பேரவையில் முதல்வர் விஜய் தலைமையிலான அரசு பெரும்பான்மையை நிரூபித்தது. முதல்வர் விஜய் தலைமையிலான அமைச்சரவையில் காங்கிரஸ், விசிக, ஐயூஎம்எல் கட்சிகளின் பிரதிநிதிகளுக்கும் இடம் அளிக்கப்பட்டது.தமிழக சட்டப்பேரவையின் ஆண்டு முதல் கூட்டம் ஆளுநர் உரையுடன் தொடங்குவது வழக்கம். இந்நிலையில், தமிழகத்தின் 17ஆவது சட்டப்பேரவைக் கூட்டம் ஆளுநர் ஆர்.வி.அர்லேகர் தலைமையில் இன்று காலை 10 மணிக்குத் தொடங்கியது. இந்த கூட்டத்தொடரில் தமிழ்த் தாய் வாழ்த்துடன் தொடங்கியது, இரண்டாவதாக தேசிய கீதம் பாடப்பட்டது. அதனை தொடர்ந்து ஆளுநர் அர்லேகர் உரையை வாசித்து வருகிறார்.

முன்னதாக முதல்வர் மற்றும் அமைச்சர்கள் பதவியேற்பு விழாக்களின் போது, ஆளுநர் மாளிகையில் முதலில் வந்தே மாதரமும், இரண்டாவதாக தேசிய கீதமும், மூன்றாவதாக தமிழ்த் தாய் வாழ்த்தும் பாடப்பட்டது சர்ச்சையை உருவாக்கியது. இந்தச் சூழலில், இன்றைய சட்டப்பேரவைக் கூட்டத்தொடர் தமிழ்த் தாய் வாழ்த்துடன் தொடங்கியுள்ளது குறிப்பிடத்தக்கது.

அண்ணா, பெரியார், காமராஜர், அம்பேத்கரை சுட்டிக்காட்டி...

தொடர்ந்து ஆளுநர் அர்லேகர் தனது உரையை வாசித்து வருகிறார். அவர் தனது உரையில் அண்ணா, பெரியார், காமராஜர், அம்பேத்கர் ஆகியோரின் பெயர்களை குறிப்பிட்டுப் பேசினார். மேலும், பெயர்கள் உச்சரிப்பில் பிழைகள் இருந்தால் பொறுத்தருளுமாறு அவர் கேட்டுக் கொண்டார்.

கடந்த ஜனவரி மாதம் அப்போதைய ஆளுநர் ஆர்.என்.ரவி தலைமையில் சட்டப்பேரவைக் கூட்டம் தொடங்கியது. ஆளுநர் ரவி, வந்தே மாதரம் பாடல் இசைக்கப்படாததை சுட்டிக்காட்டி, அரசு தயாரித்து அளித்த உரையைப் பேரவையில் வாசிக்காமல் வெளியேறினார்.

அதன்பின், அரசு தயாரித்து அளித்த உரை மட்டுமே பேரவைக் குறிப்பில் இடம்பெற வேண்டும் என்பதற்கான தீர்மானம் நிறைவேற்றப்பட்டு அப்போதைய பேரவைத் தலைவர் மு.அப்பாவு தமிழ் உரையை வாசித்தார் என்பது இங்கே நினைவுகூரத்தக்கது

## பாடாலூரில்

# ஜல்ஜீவன் திட்டத்தில் குடிநீர் வருமா? வராதா?

## ஏக்கத்தில் பொதுமக்கள்! கண்டுகொள்ளாத ஆலத்தூர் பிடிஓ!

பெரம்பலூர், ஜூன்.19:
பெரம்பலூர் மாவட்டத்தில் உள்ள பெரிய ஊராட்சிகளில் ஒன்றான ஆலத்தூர் ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட பாடாலூர் ஊராட்சியின் முக்கியப் பகுதிகளில், மத்திய அரசின் 'ஜல் ஜீவன்' திட்டமானது முழுமையாகச் செயல்படாமல் முடங்கிப் போயுள்ளது பொதுமக்களிடையே பெரும் கொந்தளிப்பை ஏற்படுத்தியுள்ளது.

**90% பணிகள் முடிந்தும் கிடப்பில் உள்ள அவலம்:**

பாடாலூர் ஊராட்சியில் இத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டு தற்போது கிட்டத்தட்ட ஒன்றரை வருடங்கள் நிறைவடைந்துவிட்டன. திட்டப் பணிகளும் சுமார் 90 சதவீதம் வரை முடிக்கப்பட்டு, இதுவரை 1,100க்கும் மேற்பட்ட வீடுகளுக்குக் குடிநீர் குழாய் இணைப்புகள் வழங்கப்பட்டுள்ளன. ஆனால், இன்னும் 200 முதல் 300 வீடுகளுக்குப் பைப்லைன்கள் போடப்படாமல் வேலை பாதியில் நிறுத்தப்பட்டுள்ளது. ஜல் ஜீவன் திட்ட ஒப்பந்ததாரருக்கு அரசு தரப்பில் இருந்து இதுவரை பில் தொகை வழங்கப்படாததே காரணம் எனக் கூறப்படுகிறது.

**குடிநீர் வால்வுகள் திருட்டும்... அதிகாரிகளின் மழுப்பலும்:**

இத்திட்டத்தின் கீழ் பைப்லைன் போடப்பட்ட மணியாங்குறிச்சி ரோடு, ஊத்தங்கால், சீதேவிமங்கலம் ரோடு, இந்திரா நகரின் ஒரு பகுதி ஆகிய புறநகர்ப் பகுதிகளுக்கு அவ்வப்போது குடிநீர் விநியோகிக்கப்படுகிறது. ஆனால், ஊராட்சியின் முக்கியப் பகுதிகளான பிள்ளையார் கோவில் தெரு, வடக்குதெரு, கடைவீதி, அரசமரத்தெரு, ரைஸ்மில் தெரு, நடுத்தெரு ஆகிய பகுதிகளுக்கு ஜல் ஜீவன் திட்ட பைப்லைன் மூலம் இதுவரை முறையாகக் குடிநீர் விநியோகம் செய்யப்படவில்லை. மாறாக, ஆங்காங்கே பைப்புகள் உடைந்து சேதமாகிக் காட்சியளிக்கின்றன. குழாய் போட்ட நாளிலிருந்து இதுவரை 6 அல்லது 7 நாட்கள் மட்டுமே பெயரளவில் குடிநீர் வந்துள்ளதாக இப்பகுதி மக்கள் வேதனை தெரிவிக்கின்றனர். மேலும், இரண்டு தெருக்களில் குடிநீர் விநியோகம் வராததைச் சாதகமாக்கிக்கொண்டு, ஒரு வருடத்திற்கு முன்பாக ஒரே நாளில் ஒட்டுமொத்தக் குடிநீர் வால்வுகளும் திருடப்பட்டுள்ளது குறித்து அப்போதே புகார் அளித்தும் ஊராட்சி நிர்வாகம் அதனைக் கண்டுகொள்ளவில்லை.









**ஊராட்சி செயலாளரின் அலட்சிய பதிலால் சர்ச்சை:**

பாடாலூர் ஊராட்சிக்குக் குடிநீர் விநியோகத்திற்காக 6 கிணறுகள் இருந்தபோதிலும், மக்களுக்குத் தினசரி குடிநீர் வழங்கப்படுவதில்லை. வாரத்திற்கு ஒருமுறையோ அல்லது இருமுறையோதான் தண்ணீர் திறக்கப்படுகிறது. இது குறித்துப் பொதுமக்கள் ஊராட்சி செயலாளரிடம் கறாராகக் கேள்வி எழுப்பியபோது, "நான் சொல்லியும் டேங்க் ஆபரேட்டர் கேட்கவில்லை" என்று பொறுப்பற்ற முறையில் பதிலளித்துள்ளார். இது குறித்துச் சமூக ஆர்வலர்கள் ஆலத்தூர் வட்டார வளர்ச்சி அலுவலர் பிடிஓ மற்றும் மண்டல துணை வட்டார வளர்ச்சி அலுவலர் (பிடிஓ) ஆகியோரிடம் புகார் அளித்தும் எந்தப் பலனும் இல்லை. ஆலத்தூர் பிடிஓ இந்த விவகாரத்தை முற்றிலும் கண்டுகொள்ளாமல் இருப்பதாக மக்கள் குற்றம் சாட்டுகின்றனர்.



■ மாவட்ட ஆட்சியர் ஷரண்யா அறி



■ பெரம்பலூர் எம்எல்ஏ சிவக்குமா

**மண்டல துணை பிடிஓ சரண்யா அவர்களின் தொலைபேசி விளக்கம்:**

இது குறித்து மண்டல துணை வட்டார வளர்ச்சி அலுவலர் சரண்யா அவர்களைத் தொலைபேசியில் தொடர்பு கொண்டு கேட்டபோது அவர் கூறியதாவது:

"ஜல் ஜீவன் திட்டம் கடந்த ஒன்றரை வருடங்களுக்கு முன்பாகவே தொடங்கப்பட்டு 90% பணிகள் முடிவடைந்துவிட்டன. அந்தத் திட்டத்தின் ஒப்பந்ததாரருக்கு இன்னும் உரிய பேமெண்ட் வரவில்லை என்பது உண்மைதான். எனினும், அவர் நிலுவையில் உள்ள மீதி வேலைகளையும் முழுமையாக முடித்தால் மட்டுமே அரசாங்கத்திடம் இருந்து பேமெண்ட் வாங்கித் தர முடியும் என்று அவரிடம் கறாராகக் கூறப்பட்டுள்ளது. மேலும், தற்போது நிலவும் தண்ணீர் பற்றாக்குறையைப் போக்குவதற்காகப் பஞ்சாயத்தின் சார்பாகப் பொதுக் குழாய்களில் கூடுதலாகத் தண்ணீர் விநியோகமும், புதிய பைப்புகளும் தற்காலிகமாக ஏற்பாடு செய்து கொடுக்கப்பட்டுள்ளன. இப்பகுதியை விரைவில் நேரில் ஆய்வு செய்து, உடைந்த பைப்புகள் மற்றும் விநியோகச் சீர்குலைவுகள் மீது நேரடியாக பார்வை இடுகிறேன் என அவர் தெரிவித்தார்.

'வீட்டுக்கு வீடு குடிநீர்' என்ற உன்னத நோக்கத்தோடு கொண்டு வரப்பட்ட மத்திய அரசின் 'ஜல் ஜீவன்' திட்டம், பெரம்பலூர் மாவட்டம் பாடாலூர் ஊராட்சியில் அதிகாரிகளின் அலட்சியத்தால் 'மூடுவிழா' காணும் நிலைக்குத் தள்ளப்பட்டிருப்பது வன்மையான கண்டனத்திற்குரியது. தற்போது பொறுப்பேற்றிருக்கும் புதிய அரசும், பெரம்பலூர் தொகுதியின் சட்டமன்ற உறுப்பினர் சிவக்குமார் அவர்களும் தொகுதி முழுவதும் மிகச் சுறுசுறுப்பாக கள ஆய்வுகளை மேற்கொண்டு வரும் வேளையில், வட்டார வளர்ச்சி அலுவலர்கள் பொதுமக்களின் அத்தியாவசியக் குடிநீர் விவகாரத்தைக் கண்டுகொள்ளாமல் கோப்புக்களை முடக்கி வைத்திருப்பது எந்த விதத்தில் நியாயம்?

பெரம்பலூர் எம்எல்ஏ சிவக்குமார் அவர்களும், புதிதாகப் பொறுப்பேற்றிருக்கும் மாவட்ட ஆட்சித் தலைவரும் இந்த விவகாரத்தில் உடனடியாக நேரடியாகத் தலையிட வேண்டும். ஆலத்தூர் பிடிஓ அலுவலகத்தின் அலட்சியப் போக்கிற்குச் சாட்டையடி கொடுத்து, பாடாலூர் ஊராட்சி மக்களுக்குச் சீரான குடிநீர் விநியோகத்தை 100% உறுதி செய்ய வேண்டும் என்பதே சமூக ஆர்வலர்கள் மற்றும் அப்பகுதிவாழ் பொதுமக்களின் எதிர்பார்ப்பு. நாமும் பொறுத்திருந்துதான் பார்ப்போம்.

## சட்டவிரோத நடவடிக்கைகளுக்கான தளமாக டெலிகிராம் செயல்படுகிறது: மத்திய அரசு குற்றச்சாட்டு

புதுடெல்லி, ஜூன்.19-
நீட் போன்ற கசிந்த தேர்வுத் தாள்களை பரப்புதல், இணையவழி மோசடி, பயங்கரவாதம் தொடர்பான பிரச்சாரம், சிறார் ஆபாசப் படங்கள், போதைப் பொருட்கள் கடத்தல் உள்ளிட்ட சட்டவிரோத நடவடிக்கைகளுக்கான ஒரு முக்கிய தளமாக டெலிகிராம் உருவெடுத்துள்ளதாக மத்திய அரசு குற்றம் சாட்டியுள்ளது. இந்த விவகாரம் தொடர்பாக டெல்லி உயர் நீதிமன்றத்தில் மத்திய அரசு தாக்கல் செய்துள்ள பிரமாணப் பத்திரத்தில், "அச்சுறுத்தும் சக்திகளை இணைக்கும் புதிய கருப்பு இணையமாக டெலிகிராம் மாறியுள்ளது. தவறான இணையதள இணைப்புகளை பதிவிட குற்றவாளிகள் டெலிகிராமை பயன்படுத்துகின்றனர். இது, குற்றவாளிகளை கண்காணித்து அடையாளம் காண்பதை அதிகாரிகளுக்கு கடினமானதாக்குகிறது. டெலிகிராமின் தனியுரிமை மற்றும் அடையாளம் மறைப்பு அம்சங்கள், குற்றத்தில் ஈடுபடும் குழுக்களுக்கு சாதகமாக உள்ளன. டெலிகிராம் பயனர்கள், தனியுரிமை அமைப்புகள் மூலம் தொலைபேசி எண்கள் மற்றும் டெலிகிராம் முகவரி போன்ற அடையாளங்களை மறைக்க முடிகிறது. இதனால், இந்த கணக்குகளுக்கு உரியவர் யார் என்பதை அடையாளம் காண்பது புலனாய்வு பிரிவினருக்கு கடினமானதாகிறது. தனியுரிமை அம்சங்கள் காரணமாக போதைப் பொருட் கடத்தல், இணையக் குற்றங்கள், தீவிரவாதம், பயங்கரவாதம், குழந்தைகளைச் சுரண்டுதல் உள்ளிட்ட சட்டவிரோத நடவடிக்கைகளுக்கு டெலிகிராம் பயன்படுத்தப்படுவதாக அவதானிக்கப்பட்டுள்ளது. பயங்கரவாத அமைப்புகளால் நிகழ்த்தப்படும் வன்முறைச் செயல்கள், உள்ளடக்கங்கள், தவறான தவகல்கள் போன்றவை டெலிகிராம் குழுக்கள் மற்றும் சேனல்கள் மூலம் பரப்பப்படுகின்றன. இணைய குற்றச் செயல்களுக்கான ஒரு மையமாக டெலிகிராம் மாறியுள்ளது. மோசடிக்காரர்கள் போலி அடையாளங்களைப் பயன்படுத்தி போலி கணக்குகளை உருவாக்கி நிதி மோசடிகளைச் செய்கின்றனர். இணைய மோசடிக்கான ஒரு ஊடகமாக டெலிகிராமை தவறாகப் பயன்படுத்துவது தொடர்பான புகார்கள் கணிசமாக அதிகரித்துள்ளன. சைபர் குற்றம் மற்றும் பணமோசடி நடவடிக்கைகளின் மூலம் கிடைக்கும் வருமானத்தைப் பெறுவதற்கும் மாற்றுவதற்கும் டெலிகிராம் சேனல்கள் பயன்படுத்தப்படுகின்றன. சைபர் குற்றங்கள் தொடர்பான கவலைகளைத் தவிர, திருட்டுத்தனமான திரைப்படங்கள், வலைத்தொடர்கள், பிற பதிப்புரிமை பெற்ற உள்ளடக்கங்களை விநியோகிக்க டெலிகிராம் சேனல்கள் பரவலாகப் பயன்படுத்தப்படுகின்றன. இது உள்ளடக்கத்தை உருவாக்குபவர்களுக்கு இழப்புகளை ஏற்படுத்துவதோடு, அறிவுசார் சொத்துரிமை குறித்த கவலைகளையும் எழுப்புகிறது" என தெரிவிக்கப்பட்டுள்ளது.

## சென்னையில் ஜூன் 21 ம் தேதி நீட் தேர்வு நடைபெறும் அன்று வார அட்டவணைப்படி மின்சார ரயில்கள் இயக்கப்படும் என தெற்கு ரயில்வே அறிவிப்பு

சென்னை, ஜூன்.19-
சென்னையில் ஜூன் 21 ம் தேதி நீட் தேர்வு நடைபெறும் அன்று வார அட்டவணைப்படி மின்சார ரயில்கள் இயக்கப்படும் என தெற்கு ரயில்வே அறிவித்துள்ளது. ஞாயிற்றுக்கிழமை ஆயினும் வார இறுதி அட்டவணையில் இல்லாமல் வாராந்திர அட்டவணையில் ரயில்கள் இயங்கும் என்றும் மாணவர்களுக்கு உதவ முக்கிய ரயில் நிலையங்களில் சிறப்பு நீட் உதவி மையங்களும் அமைக்கப்படவுள்ளன என்றும் தெற்கு ரயில்வே தெரிவித்துள்ளது






## சேலம் மருளையாம்பாளையம் சின்னமாரியம்மன் கோவில் கும்பாபிஷேகம்

சேலம், ஜூன்.19-
சேலம் மாவட்டம் மருளையாம்பாளையம் அருள்மிகு ஸ்ரீசின்ன மாரியம்மன் ஆலய புனராவர்த்த ஆலய அஷ்டபந்தன மஹா கும்பாபிஷேக விழா நடைபெற்றது. அதனை தொடர்ந்து மஹா அபிஷேகம் மற்றும் தீபாராதனை பிரசாதம் வழங் கப்பட்டது. முன்னதாக முகூர்த்தக்கால் நடுதல், கங்கனம் கட்டுதல், முலைப்பாரி போடுதல், கிராம சாந்தி, ப்ரவேச பலி, வாஸ்து சாந்தி, கணபதி ஹோமம், நவக்ரஹா ஹாமம், தான்ய பூஜை, தீர்த்தக் குடம், முலைப்பாரி, பசு, பரியுடன், மஹாலட்சுமி ஹோமம், தன பூஜை, தீபூஜை, துவாரபூஜை, தீபஸ்தாபனம், கும்ப அலங்காரம், தீபாராதனை பிரசாதம், இரண்டாம் காலயாக சாலை பூஜைகள் ஆரம்பம், தீபாராதனை ஆகியவை நடைபெற்றது. விழாக்கான ஏற்பாடுகளை கோவில் விழா நிர்வாகக்குழுவினர் செய்திருந்தனர்.

## தாய்மாமன் சீராக பூரண மதுவிலக்கை அறிவிக்க வேல்முருகன் வலியுறுத்தல்

சென்னை, ஜூன்.19-
தமிழக சட்டப்பேரவை கூட்டத்தொடரில் தாய்மாமன் சீராக தமிழகத்தில் பூரண மதுவிலக்கு அறிவிப்பை வெளியிட தமிழக வாழ்வுரிமைக் கட்சி தலைவர் தி.வேல்முருகன் வலியுறுத்தியுள்ளார்.



இது குறித்து அவர் வெளியிட்ட அறிக்கையில், "தமிழகம் முழுவதும் சுமார் 4,787 டாஸ்மாக் கடைகள் இயங்குகின்றன. இக்கடைகள் நண்பகல் 12 மணிக்கு திறக்கப்பட்டு இரவு 10 மணிக்கு மூடப்படுகின்றன. இந்நிலையில், தமிழக அரசு கடந்த 12ம் தேதி 717 மதுக்கடைகளை மூட உத்தரவிட்டது. இக்கடைகள் மூடப்பட்ட பிறகு, கடை அருகே உள்ள சந்துகளில் (சந்துக் கடைகளில்) கள்ளச்சாராயம் உள்ளிட்ட மதுபானங்கள் தடையின்றி விற்கப்படுவதாக கூறப்படுகிறது. கிராம சபை கூட்டங்களில் மதுபானக் கடையை மூடச் சொல்லி தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டாலும், கடந்தகால அரசுகள் அவற்றைப் பொருட்படுத்தவில்லை. தினசரி சுமார் ரூ.100 கோடி அளவுக்கு மது விற்பனை நடைபெறுகிறது. வார விடுமுறை மற்றும் பொங்கல், தீபாவளி, புத்தாண்டு போன்ற விடுமுறை நாட்களில் இந்த விற்பனை இரட்டிப்பாக அதிகரிக்கிறது.

மதுக்கடைகளை மூட வேண்டும் என பொதுமக்களும், பல்வேறு அரசியல் கட்சிகளும் தொடர்ந்து வலியுறுத்துகின்றனர். எனவே, சட்டப்பேரவைக் கூட்டத்தொடரில் அரசு மதுக்கடைகள் மற்றும் தனியார் மதுக் குடிப்பகங்கள் மூடப்படும் என்ற அறிவிப்பை வெளியிட வேண்டும். இது தமிழக பெண்களுக்கு தமிழக அரசு அளிக்கும் மிகப் பெரிய பரிசாக அமையும். இதைவிட பெரிய பரிசு என்றால் அது பூரண மதுவிலக்கே. தமிழக பெண்களுக்கு உண்மையான தாய்மாமன் சீராக அமையும். எனவே, தமிழகத்தில் பூரண மதுவிலக்கு அமல்படுத்தப்படும் என்று இந்தச் சட்டசபை கூட்டத்தொடரில் அறிவிக்க வேண்டும். இவ்வாறு அதில் அவர் தெரிவித்துள்ளார்.




## உத்தவ் சிவசேனா கிளர்ச்சி எம்.பி.க்கள் 6 பேருக்கும் 'ஒய் பிளஸ்' பாதுகாப்பு

மும்பை, ஜூன்.19-
உத்தவ் தாக்கரே சிவசேனா (யுபிடி) கிளர்ச்சி எம்,பி.க்கள் 6 பேருக்கும் மகாராஷ்டிர காவல் துறை சார்பில் ஒய் பிளஸ் பாதுகாப்பு அளிக்கப்பட்டுள்ளது.

உத்தவ் தாக்கரே தலைமையிலான சிவசேனா (யுபிடி) கட்சியைச் சேர்ந்த 6 எம்.பி.க்கள், டெல்லியில் இன்று நடைபெற்ற அக்கட்சியின் நாடாளுமன்றக் குழுக் கூட்டத்தில் கலந்து கொள்ளவில்லை. கட்சி சார்பில் கொறடா உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருந்த நிலையில் அவர்கள் கலந்து கொள்ளாததால், அவர்கள் ஏக்நாத் ஷிண்டேவின் சிவசேனா கட்சியில் இணைய இருப்பது ஏறக்குறைய உறுதியாகி உள்ளது.

இதனிடையே நாகேஷ் ஆஸ்திகர், சஞ்சய் தேஷ்முக், சஞ்சய் ஜாதவ், சஞ்சய் தினா பாட்டீல், ஓம் பிரகாஷ் ராஜேநிம்பல்கர், பாவ்சாகேப் வக் சவ்ரே ஆகிய 6 எம்.பி.க்களும் சிவசேனாவில் இணைவதற்கான கோரிக்கை அடங்கிய கடிதத்தை மக்களவை சபாநாயகர் ஓம் பிர்லாவிடம் சமர்ப்பித்துள்ளதாகவும் தகவல் வெளியாகி உள்ளது.

சிவசேனா (யுபிடி) கட்சியைச் சேர்ந்த ஆறு எம்.பிக்களும் அணி மாறுவதை உறுதிப்படுத்தும் மற்றொரு நிகழ்வாக, அவர்களுக்கு மகாராஷ்டிர அரசு ஒய் பிளஸ் பாதுகாப்பை வழங்கியுள்ளது.சிவசேனா (யுபிடி) கட்சியின் நாடாளுமன்றக் குழு கூட்டத்துக்குப் பின்னர் டெல்லியில் செய்தியாளர்களிடம் பேசிய அக்கட்சியின் மாநிலங்களவை உறுப்பினர் சஞ்சய் ராவத், "இன்று நடைபெற்ற கூட்டத்தில் அரவிந்த் சாவந்த், ராஜாபாவ் வாஜே, அனில் தேசாய் ஆகிய மூன்று மக்களவை உறுப்பினர்கள் மட்டுமே கலந்து கொண்டனர். கூட்டத்தில் பங்கேற்காத உறுப்பினர்கள் கட்சியின் கொறடா உத்தரவை மீறியுள்ளனர். எனவே, அவர்கள் மீது நடவடிக்கை தொடங்கப்பட்டுள்ளது. அவர்களுக்கு விளக்கம் கேட்டு நோட்டீஸ் அனுப்பப்படும். அவர்களின் உறுப்பினர் பதவியை ரத்து செய்வது குறித்து பரிசீலிப்போம்.இன்னமும் அவர்கள் எங்கள் கட்சியின் உறுப்பினர்களாகவே உள்ளனர். எங்கள் சின்னத்தில்தான் வெற்றி பெற்றனர். கொறடா உத்தரவை மீறியதால் அவர்கள் சட்ட ரீதியிலான நடவடிக்கையை எதிர்கொள்ள வேண்டி இருக்கும்.பாஜக நாட்டின் அரசியலை, குறிப்பாக மகாராஷ்டிர அரசியலை களங்கப்படுத்தி உள்ளது. அதற்கான விலையை அவர்கள் கொடுக்க வேண்டி இருக்கும். ஒரு முக்கியமான நபரிடமிருந்து எனக்கு ஓர் அழைப்பு வந்தது. ஒவ்வொரு எம்பிக்கும் ரூ.50 கோடி வழங்கப்பட உள்ளதாகவும், முன்பணமாக ரூ.15 கோடி வழங்கப்பட்டுள்ளதாகவும் அவர் கூறினார். மாற்று கட்சியில் இணைய விரும்புபவர்கள் யாராக இருந்தாலும் அவர்கள் தங்களின் தற்போதைய பதவியை ராஜினமா செய்து விட்டு செல்லட்டும்" என தெரிவித்தார்.



## “தெற்காசிய சாப்ட் பேஸ்பாலில் இந்தியாவுக்குத் தங்கக் கோப்பை!” இறுதிப்போட்டியில் நேபாளத்தை வீழ்த்தி சாதனை!

சேலம், ஜூன்.19-
நேபாளத்தில் நடைபெற்ற தெற்காசிய சாப்ட் பேஸ்பால் 2026 சர்வதேச விளையாட்டுப் போட்டியில், இந்திய மகளிர் அணி முதலிடம் பிடித்து வரலாற்றுச் சிறப்புமிக்க தங்கக் கோப்பையைக் கைப்பற்றி சாதனை படைத்துள்ளது. இதில் பெண்கள் பிரிவில் இந்தியா, மாலத்தீவு, தாய்லாந்து, ஸ்ரீலங்கா, நேபாளம், பூட்டான் ஆகிய 6 நாடுகள் கலந்துகொண்டன. இப்போட்டிகள் இரண்டு பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டு, முதல் இரண்டு இடங்களைப் பெற்ற மொத்தம் 4 அணிகள் அரையிறுதிப் போட்டிக்குத் தகுதி பெற்றன.அரையிறுதிப் போட்டிகளின் முடிவில், இந்தியா மற்றும் நேபாள அணிகள் இறுதிப்போட்டிக்குத் தகுதி பெற்றன. இத்தொடரில் வெற்றி பெற்ற இந்திய மகளிர் அணியில், சேலம் மாவட்டம் சீலநாயக்கன்பட்டியைச் சேர்ந்த லாவண்யா, நெத்திமேடு பகுதியைச் சேர்ந்த அபிநயா, கொண்டலாம்பட்டி பகுதியைச் சேர்ந்த தன்ஷிகா ஆகிய மூன்று தமிழக வீராங்கனைகள் இடம்பெற்று அசத்தியுள்ளனர். இவர்களின் இந்தச் சாதனை ஒட்டுமொத்த தமிழ்நாட்டிற்கும், குறிப்பாக அவர்கள் பிறந்து வளர்ந்த சேலம் மாவட்டத்திற்கும் மிகப்பெரிய பெருமையைச் சேர்த்துள்ளது. சர்வதேச அரங்கில் தங்கக் கோப்பையை வென்ற இந்திய மகளிர் அணிக்குத் தமிழ்நாடு அரசு சார்பில் அதிகாரப்பூர்வப் பாராட்டுகள் தெரிவிக்கப்பட்டுள்ளன. மேலும், சேலத்தைச் சேர்ந்த மூன்று வீராங்கனைகளுக்கும் சேலம் பேஸ்பால் சங்கத்தின் சார்பில் வாழ்த்துக்களும், சிறப்பு நினைவுப் பரிசுகளும் வழங்கி கௌரவிக்கப்பட்டது.



## ”எதிர்காலப் படிப்புகளும்... வேலைவாய்ப்பு நுணுக்கங்களும்!” எஸ். வீராசாமி செட்டியார் பாலிடெக்னிக் கல்லூரியில் முதலாம் ஆண்டு வகுப்புகள் தொடக்கம்

புளியங்குடி, ஜூன்.19-
தென்காசி மாவட்டம் புளியங்குடியில் அமைந்துள்ள எஸ் வீராசாமி செட்டியார் பாலிடெக்னிக் கல்லூரியில் முதலாம் ஆண்டு மாணவர்களுக்கான வகுப்புகள் தொடங்கும் விழா கல்லூரியில் வெகு சிறப்பாக நடைபெற்றது. இதில் கல்விக் குழுமங்களின் தலைவர் டாக்டர் முருகையா மற்றும் செயல் இயக்குனர் விக்னேஷ் வீராசாமி அறிவுறுத்தலின் பேரில் முதல்வர் இசக்கி முத்து தலைமையில் விழா ஆரம்பமானது. விழாவின் சிறப்பு விருந்தினர்களாக எஸ் வீராசாமி செட்டியார் பொறியியல் கல்லூரி முதல்வர் முனைவர் டாக்டர் வி. மணிகண்டன், எஸ் வீராசாமி செட்டியார் கல்வியியல் கல்லூரியின் முதல்வர் டாக்டர் சுப்பிரமணியன் எஸ் வீராசாமி செட்டியார் கல்வி குழுமங்களின் வளர்ச்சி பிரிவு இயக்குனர் டாக்டர் ஜமால் முகமது ஜுபேர் கலந்து கொண்டனர். இதில் சிறப்பு விருந்தினர்கள் டாக்டர் வி. மணிகண்டன் மாணவர்களுக்கான ஒழுக்கம் வேலை வாய்ப்பு மற்றும் உயர்கல்விக்கான வழி வகுப்புகள் மாணவர்களுடைய வளர்ச்சியில் இன்று எப்படி உள்ளது என்பதை விரிவாக விளக்கமாக மாணவர்க்கும் பெற்றோர்களுக்கும் ஆலோசனை வழங்கினர். இன்றைய காலகட்டத்திற்கான படிப்புகள் ஆய்வக வசதிகள் மற்றும் அதன் நுணுக்கங்களை பற்றிய விளக்கங்களையும் எடுத்துக் கூறி வாழ்த்துக்களையும் பாராட்டுக்களையும் தெரிவித்தனர் இதற்கான ஏற்பாடுகளை எஸ் வீராசாமி செட்டியார் கல்விக் குழுமங்களின் மேலாளர் தங்கப்பன் பிள்ளை மற்றும் அனைத்து துறை தலைவர்களும் ஆசிரியர்களும் அலுவலக ஊழியர்களும் ஏற்பாடுகள் செய்திருந்தனர்.




## “சிறகு விரித்த சிறப்புப் பிள்ளைகள்!” புளியங்குடி மோளி’ஸ் பள்ளியின் 2ஆம் ஆண்டு துவக்க விழா விளையாட்டுப் போட்டிகள்!

தென்காசி, ஜூன்.19-
தென்காசி மாவட்டம் புளியங்குடி மோளி'ஸ் மனவளர்ச்சி குன்றிய மாற்றுத்திறனாளிகள் சிறப்பு பள்ளியின் முதலாம் ஆண்டு நிறைவு விழா நிறைவு மற்றும் இரண்டாம் ஆண்டு துவக்க விழாவான மற்றும் மாணவர்களுக்கான விளையாட்டு போட்டி மற்றும் கலை நிகழ்ச்சியானது தனியார் திருமண மண்டபத்தில் வைத்து நடைபெற்ற நிகழ்ச்சியில் பள்ளி நிறுவன சாமுவேல் ஜெய்சிங் தலைமையில் நடைபெற்றது.இதில் புளியங்குடி காவல் உதவி ஆய்வாளர் பவுல் முன்னிலை வகித்தார். சிறப்பு விருந்தினரான சொக்கம்பட்டி ஸ்ரீ தனலட்சுமி விலாஸ் அல்வா கடை உரிமையாளர் கணேசன், அப்துல் கலாம் பொதுநல சேவை அமைப்பின் தலைவர் சின்ராஜ்,செயலாளர் பாக்யராஜ் விக்னேஷ் ஹோட்டல் உரிமையாளர் முத்துக்குமார் பிஸ்மி பிராய்லர்ஸ் உரிமையாளர் பீர்முகமது சமூக ஆர்வலர் சௌந்தரராஜன் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாக கலந்து கலந்து கொண்டு சிறப்பித்தனர்.
இந்நிகழ்ச்சியில் சிறப்புப் பள்ளியில் பணியாற்றும் இயன்முறை மருத்துவர் பிரியா, சுகன்யா,பிரியா, அந்தோணிராஜ், கிறிஸ்டி, மரியபுஷ்பம், முருகேஸ்வரி,சிவகாமி உள்ளிட்டோர் கலந்து கொண்டன நிலையில் போட்டியில் வெற்றிபெற்ற மாணவர்கள், மாணவர்களின் பெற்றோர்களுக்கும் பரிசுகளை வழங்கினர்.

## “பட்டா மாறுதல், புதிய ரேஷன் கார்டுகளுக்குப் போர்க்கால அதிரடி!” தென்காசி ஜமாபந்தியில் கலெக்டர் ரஞ்ஜீத்சிங் மனுக்கள் ஏற்பு!

தென்காசி, ஜூன்.19-
தென்காசி வட்டாட்சியர் அலுவலகத்தில் பசலி 1435 (20252026) வருவாய் தீர்வாயம் (ஜமாபந்தி) இரண்டாம் நாள் நிகழ்வாக மாவட்ட ஆட்சித்தலைவர் ரஞ்ஜீத்சிங், இ.ஆ.ப., பொதுமக்களிடம் கோரிக்கை மனுக்களை பெற்று உடனடி நடவடிக்கை மேற்கொள்ள அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார்.பின்னர் மாவட்ட ஆட்சித்தலைவர் தெரிவிக்கையில்தென்காசி மாவட்டத்தில் உள்ள அனைத்து வட்டாட்சியர் அலுவலகங்களிலும்1435 (2025 2026) ஆம் பசலிக்கான வருவாய்த் தீர்வாயம் (ஜமாபந்தி) நடைபெற்று வருகிறது.



நேற்று (17.06.2026) கடையம் குறுவட்டத்தின் கீழ் உள்ள கிராமப் பகுதிகளிலும், இன்றைய தினம் (18.06.2026) ஆழ்வார்குறிச்சி குறுவட்டத்திற்குட்பட்ட சிவசைலம், ஆழ்வார்குறிச்சி பகுதி 1, ஆழ்வார்குறிச்சி பகுதி 2, மேல ஆம்பூர் பகுதி 1, மேல ஆம்பூர் பகுதி 2, கீழ ஆம்பூர் வடக்கு பாப்பன்குளம், அடைச்சாணி ஆகிய கிராமப் பகுதிகளுக்கு வருவாய் தீர்வாயம் (ஜமாபந்தி) மேற்கொள்ளப்பட்டது. மேலும், இக்கிராமங்களைச் சேர்ந்த பொதுமக்கள் பட்டா மாறுதல், புதிய குடும்ப அட்டை, வாரிசு சான்று போன்ற பல்வேறு கோரிக்கை சார்ந்த 41 மனுக்களை வழங்கினார்கள். இக்கோரிக்கை மனுக்கள் மீது உடனடியாக நடவடிக்கை மேற்கொள்ள துறை சார்ந்த அலுவலர்களுக்கு அறிவுறுத்தப்பட்டது. மேலும், 19.06.2026 அன்று கல்லூரணி குறுவட்டத்தின் கீழ் உள்ள கிராமப் பகுதிகளிலும், 23.06.2026 அன்று தென்காசி குறுவட்டத்தின் கீழ் உள்ள கிராமப்பகுதிகளிலும் 1435 (20252026) ஆம் பசலிக்கான வருவாய்த் தீர்வாயம் (ஜமாபந்தி) நடைபெறவுள்ளது என மாவட்ட ஆட்சித்தலைவர் ரஞ்ஜீத்சிங், இ.ஆ.ப., தெரிவித்தார்.இந்நிகழ்வில், தென்காசி வட்டாட்சியர் ஹரிஹரன், மாவட்ட ஆட்சியர் அலுவலக மேலாளர் இராம்குமார் (பொது), தென்காசி தனி வட்டாட்சியர் (குடிமைப்பொருள்) அரவிந்த், உதவி ஆணையர் (நில அளவை) ஜாஹீர் உசைன், வட்டாட்சியர்கள் ஓசன்னா பெர்னாண்டோ (நகர நிலவரித்திட்டம்) பட்டமுத்து (நகர நிலவரித் திட்டம்), கண்ணன் (சமூக பாதுகாப்பு திட்டம்), சரவணன் (கோட்ட கலால்), அருணாசலம் (ஆதி திராவிடர் நலம்) மற்றும் அரசு அலுவலர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

## தியாகிகளின் பெயர்களைச் சூட்டக் கோரி பேரூராட்சித் தலைவியிடம் நுகர்வோர் பாதுகாப்பு கழகம் நெகிழ்ச்சி வேண்டுகோள்!

திசையன்விளை, ஜூன்.19-
திசையன்விளை தாலுகா அளவிலான சுதந்திரப் போராட்ட தியாகிகளின் நினைவைப் போற்றும் வகையிலும், அவர்களது திருப்பெயர்களை வாரச்சந்தை மற்றும் முக்கியச் சாலைகளுக்குச் சூட்டக் கோரியும் திசையன்விளை பேரூராட்சித் தலைவியிடம் முக்கியக் கோரிக்கை மனு அளிக்கப்ப ட்டுள்ளது.
வாரச்சந்தைக்குத் தியாகி ராமநாதன் பெயர்:
திசையன்விளை பேரூராட்சியில் வாழ்ந்து, திசையன்விளை பேரூராட்சித் தலைவராகவும் பதவி வகித்து மக்களுக்குப் பெரும் தொண்டாற்றிய பெருமதிப்பிற்குரிய சுதந்திரப் போராட்ட வீரர் ராமநாதன் அவர்களின் திருப்பெயரை, திசையன்விளை வாரச்சந்தைக்குச் சூட்டி அவரைக் கௌரவிக்க வேண்டும் எனப் பொதுமக்கள் தரப்பில் கோரிக்கை வைக்கப்பட்டுள்ளது.பிரபலமான சாலைக்குத் தியாகி மகாராஜா மார்த்தாண்டன் பெயர்:அதேபோல், திசையன்விளை தாலுகா அளவிலான தியாகிகளை வருங்கால இளைய சந்ததியினர் அறிந்துகொள்ளும் வகையில், குட்டம் சுதந்திரப் போராட்ட வீரர் தியாகி மகாராஜா மார்த்தாண்டன் அவர்களின் திருப்பெயரைத் திசையன்விளை பேரூராட்சியின் பிரபலமான முக்கியச் சாலை ஒன்றிற்குச் சூட்ட வேண்டும் என்றும் வலியுறுத்தப்பட்டுள்ளது.பேரூராட்சித் தலைவியிடம் மனு அளிப்பு:



இக்கோரிக்கைகள் அடங்கிய முறையான மனுவினை, குட்டம் நுகர்வோர் பாதுகாப்பு கழக நிறுவனர் பொன்.சண்முகநாதன் மார்த்தாண்டன் மற்றும் தியாகி மகாராஜா மார்த்தாண்டன் அவர்களின் பேரனும், இக்கழகத்தின் செயலாள ருமான ஆனந்த பிரசாத் மார்த்தாண்டன் ஆகியோர் இணைந்து திசையன்விளை பேரூராட்சி மன்றத் தலைவி ஜான்சிராணி முருகானந்தத்திடம் நேரில் வழங்கினர். மனுவைப் பெற்றுக்கொண்ட பேரூராட்சித் தலைவி, இது குறித்து உரிய ஆலோசனைகள் மேற்கொண்டு ஆக்கப்பூர்வ நடவடிக்கை எடுக்கப்படும் என உறுதியளித்தார்.

## திருச்செந்தூர் முருகன் கோயிலில் செல்போன் பயன்படுத்த தடை: ஜுலை 1 முதல் அமலாகிறது

திருச்செந்தூர், ஜூன்.19-
திருச்செந்தூர் சுப்பிரமணிய சுவாமி கோயில் நிர்வாகம் வெளியிட்டுள்ள அறிக்கை: சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளை வழங்கியுள்ள தீர்ப்பின்படி திருச்செந்தூர் சுப்பிரமணிய சுவாமி கோயில் உள்ளே பக்தர்கள் செல்போன் பயன்படுத்துவதை தடை செய்து உத்தரவிடப்பட்டுள்ளது. இதன்படி, கடந்த 14.11.2022 முதல் திருக்கோயிலுக்குள் செல்போன் பயன்படுத்தத்தடை விதிக்கப்பட்டுள்ளது. தற்போது, மேற்படி நீதிமன்ற உத்தரவை முழுமையாக செயல் படுத்துவதற்காக வருகிற ஜூலை 1ம்தேதி முதல் செல்போன் பயன்படுத்த விதிக்கப்பட்ட தடையானது, மிகத் தீவிரமாக நடைமுறைப்படுத்தப்பட உள்ளது.திருக்கோயிலுக்குள் பக்தர்கள் அனுமதிக்கப்படும் பொது தரிசன வரிசை, ரூ.100 விரைவு தரிசன கட்டண வரிசை, மூத்த குடிமக்கள் மற்றும் மாற்றுத் திறனாளிகளுக்கான வரிசை போன்ற அனைத்து பகுதிகளிலும் பக்தர்கள் முழுமையாக பரிசோதனை செய்யப்பட்டு



அதன் பின்னரே திருக்கோயிலுக்குள் அனுமதிக்கப்பட உள்ளனர். எனவே பக்தர்கள் திருக்கோயிலுக்கு வரும்போது தங்கள் செல்போன்களை, தாங்கள் தங்கியிருக்கும் இடங்களிலோ அல்லது தங்களது வாகனங்களிலோ, பாதுகாப்பாக வைத்துவிட்டு சுவாமி தரிசனம் செய்ய வருகை தருமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது. பக்தர்கள் செல்போன்களை பாதுகாப்பாக வைப்பதற்காக ஆங்காங்கே.திருக்கோயில் நிர்வாகம் சார்பில் செல்போன் வைப்பிடங்கள் நிறுவப்பட்டுள்ளன. அவற்றைப் பயன்படுத்தி பக்தர்கள் தங்கள் செல்போன்களை பாதுகாப்பாக வைத்துவிட்டு தரிசனத்திற்கு செல்ல வேண்டும். பரிசோதனையின் போது பக்தர்களிடம் செல்போன்கள் இருப்பது கண்டறியப்பட்டால், அவற்றை பறிமுதல் செய்து பாதுகாப்பு பெட்டகங்களில் வைப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.
பக்தர்கள் அவசர பயன்பாட்டிற்காக, மருத்துவ மையம், ஆம்புலன்ஸ் வசதி, பொது அறிவிக்கை அமைப்பு, ஒலிபெருக்கிகள், மின்கல ஊர்திகள் மற்றும் சக்கர நாற்காலி உள்ளிட்ட வசதிகள் கோயில் நிர்வாகத் தால் ஏற்படுத்தப்பட்டு பயன்பாட்டில் உள்ளன. எனவே உயர்நீதிமன்ற உத்தரவின்படி கோயிலுக்குள் செல்போன் இன்றி தரிசனம் செய்வதை முழுமையாக நடைமுறைப்படுத்த பக்தர்கள் மற்றும் பொதுமக்கள் தேவையான ஒத்துழைப்பு வழங்க வேண்டும். இவ்வாறு கூறப்பட்டுள்ளது

### வானிலை முன்னறிவிப்பு

## கோவை, மதுரை உள்ளிட்ட 27 மாவட்டங்களில் கனமழை வாய்ப்பு

சென்னை, ஜூன்.19-
தமிழகத்தில் நீலகிரி, கோவை, மதுரை, திருச்சி, சேலம் உள்ளிட்ட 27 மாவட்டங்களில் நாளை (ஜூன் 19) கனமழை பெய்ய வாய்ப்புள்ளது.
இது தொடர்பாக சென்னை வானிலை ஆய்வு மையம் வெளியிட்ட செய்திக் குறிப்பு: கிழக்கு விதர்பா முதல் தமிழக பகுதிகள் வரை, தெலங்கானா மற்றும் ஆந்திரா வழியாக சுமார் 0.9 கிமீ உயரத்தில் ஒரு வளிமண்டல காற்றழுத்த தாழ்வு பாதை நிலவுகிறது.
தென்கிழக்கு அரபிக்கடல் மற்றும் அதனை ஒட்டிய கேரளப் பகுதிகளின் மேல் சுமார் 3.1 கிமீ உயரத்தில் ஒரு வளிமண்டல சுழற்சி நிலவுகிறது. இவை காரணமாக தமிழகத்தில் நாளை (ஜூன் 19) பெரும்பாலான இடங்களில இடி, மின்னலுடன் கூடிய லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும்.மேலும் நீலகிரி, கோவை, ஈரோடு, திருப்பூர், தேனி, திண்டுக்கல், மதுரை, சிவகங்கை, புதுக்கோட்டை, தஞ்சாவூர், திருவாரூர், நாகப்பட்டினம், மயிலாடுதுறை, கரூர், திருச்சி, அரியலூர், பெரம்பலூர், கடலூர், கள்ளக்குறிச்சி, விழுப்புரம், திருவண்ணாமலை, வேலூர், திருப்பத்தூர், கிருஷ்ணகிரி, தருமபுரி, சேலம், நாமக்கல் மாவட்டங்கள் மற்றும் புதுச்சேரி, காரைக்கால் பகுதிகளில் ஓரிரு இடங்களில் இடி, மின்னல் மற்றும் பலத்த காற்றுடன் கூடிய கனமழை பெய்யக்கூடும். தமிழகத்தில் 20 முதல் 24ம் தேதி வரை ஓரிரு இடங்களில் லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும்.சென்னை மற்றும் புறநகர் பகுதிகளில் நாளை வானம் ஓரளவு மேகமூட்டத்துடன் காணப்படும். நகரின் ஓரிரு பகுதிகளில் இடி, மின்னலுடன் கூடிய லேசான அல்லது மிதமான மழை பெய்ய வாய்ப்புள்ளது.தென் தமிழக கடலோரப் பகுதிகள், மன்னார் வளைகுடா மற்றும் அதனை ஒட்டிய குமரிக்கடல் பகுதிகளில் நாளை முதல் 22ம் தேதி வரை சூறாவளிக்காற்று மணிக்கு 40 முதல் 50 கி.மீ. வேகத்திலும், இடையிடையே 60 கி.மீ. வேகத்திலும் வீசக்கூடும். எனவே இப்பகுதிகளுக்கு மீனவர்கள் செல்ல வேண்டாம்.தமிழகத்தில் இன்று காலை 8.30 மணியுடன் நிறைவடைந்த 24 மணி நேரத்தில் பதிவான மழை அளவுகளின்படி, திருவண்ணாமலை மாவட்டம் அரட்டவாடியில் 13 செமீ, திருச்சி மாவட்டம் தொட்டியபட்டி, கோவில்பட்டி, விழுப்புரம் மாவட்டம் திண்டிவனத்தில் தலா 7 செமீ, திருவண்ணாமலை மாவட்டம் தண்டராம்பட்டு, தஞ்சாவூர் மாவட்டம் கல்லணையில் தலா 5 செமீ மழை பதிவாகியுள்ளது.

## பாலியல் வன்கொடுமையில் ஈடுபட்ட தவெகவினர் மீது நடவடிக்கை

### இந்திய கம்யூனிஸ்ட் வலியுறுத்தல்

சென்னை, ஜூன்.19-
ஸ்ரீவைகுண்டத்தில் இளம்பெண் கூட்டுப் பாலியல் வன் கொடுமைக்கு ஆளாக்கப்பட்ட சம்பவத்தில் தொடர் புடைய ஆளும் கட்சி நிர்வாகிகள் மீது கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று இந்தியக் கம் யூனிஸ்ட் கட்சியின் மாநிலச் செயலாளர் மு.வீரபாண் டியன் வலியுறுத்தியுள்ளார்.
இதுகுறித்து அவர் வெளியிட்டுள்ள எக்ஸ் பதிவில், “ஸ்ரீவை குண்டம் இளம்பெண் கூட்டு பாலியல் வன்கொடுமையில் தவெக நிர்வாகிகள் ஈடுபட்டுள்ள நிகழ்வு தமிழகம் முழு வதும் அதிர்ச்சி அலையை உருவாக்கியுள்ளது.
காவல் துறையில் புகார் அளிக்கக் கூடாது என எம் எல்ஏ வி.ஜி.சரவணன் மிரட்டியதாக அப்பெண் குற்றம் சாட்டியுள்ளார். சம்பந்தப்பட்டவர்கள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும். பாதிக்கப்பட்ட பெண்ணுக்கு உரிய நிவாரணமும், அரசு வேலையும், பாதுகாப்பும் வழங்க வேண்டும்” என தெரிவித்துள்ளார்.




SAKKRA VIYUGAM owned and published by PAL PANDIAN, printed at SHANLAX PRESS 66, VP COMPLEX, TPK MAIN ROAD, VASANTHA NAGAR, MADURAI-625003,
Published at 70/53 A1, THILAGAR NAGAR 1ST STREET, ANUPPARPALAYAM, TIRUPPUR, TAMIL NADU-641652 Editor: PAL PANDIAN Phone : 88705 00000